**NST Campus**

# மூன்றாம் தவணைப் பரீட்சை - 2026

| தரம் 06 | விஞ்ஞானம் | 2 மணித்தியாலம் |
|---|---|---|

சுட்டிலக்கம் : ........................ புள்ளிகள்

## பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

01) பின்வருவனவற்றுள் தற்போசணை அங்கி யாது?
1) இறால் 2) நத்தை 3) புல் 4) வண்ணத்துப் பூச்சி

02) திணிவை அளவிடும் அலகு அல்லாதது?
1) கிலோகிராம் 2) மில்லி கிராம் 3) மில்லி மீற்றர் 4) தொன்

03) ஒளிச் சக்தியை மின்சக்தியாக மாற்றுவது எது?
1) மின்னழுத்தி 2) சூரிய படல் 3) மின்னடுப்பு 4) கணனி

04) தீர்ந்து போகாத சக்தி முதலாக அமைவது எது?
1) கருச்ச சக்தி 2) உயிர்த்திணிவு 3) கடலலை 4) எரிபொருள்

05)



அருகில் காட்டப்பட்டுள்ள அளக்கும் உருளையின் வாசிப்பு யாது?
1) 32ml 2) 38ml
3) 40ml 4) 42ml

06) அங்கிகளில் சக்தி உற்பத்தி செய்யப்படும் செயன்முறையாக அமைவது?
1) போசணை 2) ஒளித் தொகுப்ப 3) சுவாசம் 4) இனப்பெருக்கம்

07) பின்வருவனவற்றுள் ஒளியை கசியவிடும் பொருள் எது?
1) பலகை 2) கண்ணாடி
3) புகையூட்டிய கண்ணாடி 4) தெளிவான நீர்

08) மிகச் சிறிய மின்னோட்டத்தை அளவிட பொருத்தமான உபகரணம் யாது?
1) டைனமோ 2) அம்பியர்மானி 3) வோல்ற்மானி 4) கல்வனோமானி

09) கடல் நீரிலிருந்து பிரித்தெடுக்கப்படும் உப்பு எது?
1) கல்சியம் குளோரைட்டு 2) கல்சியம் சல்பேற்று
3) சோடியம் சல்பேற்று 4) சோடியம் குளோரைட்டு

10) பொங்கு முகத்தில் காணப்படும் நீரின் வகை யாது?
1) நன்னீர் 2) உவர் நீர் 3) சவர் நீர் 4) மேற்பரப்பு நீர்

11) ஆய்வுகூடத்தில் நீரை இனங்காணும் சோதனைப் பொருளும் நீருடன் காட்டும் நிறமும் முறையே
1) பாசிச்சாயத்தாள், சிவப்பு
2) கோபால்ட் குளோரைட்டு, நீலம்
3) செப்புச் சல்பேற்று, வெள்ளை
4) கோபால்ட் குளோரைட்டு, இளஞ் சிவப்பு

12) சரியான கூற்றுக்களைத் தெரிவு செய்க
a) ஒளிக்கதிர்கள் சேர்ந்து ஒளிக்கற்றையை உருவாக்குதல்

b) நீரினூடாக மட்டுமே ஒளிக்கதிர்கள் நேர்கோட்டில் பயணிக்கும்
c) சந்திரன் ஒளிராப் பொருளாகும்
1) a,b 2) b,c 3) a,c 4) a,b,c

13) துணைக்கலங்கள் பற்றிய சரியான கூற்று எது?
1) ஒரு முறை மாத்திரம் பயன்படுத்தலாம்
2) சந்தையில் மலிவாகப் பெறலாம்
3) மின்னேற்றஞ் செய்து பயன்படுத்தலாம்
4) யாவும் சரி

14) கற்பூரம், மெழுகு, பலாப் பிசின் போன்றவற்றில் சம அளவுகளை எடுத்து ஒரேயளவு வெப்பம் வழங்கும் போது குறைந்த நேரத்தில் திரவமாக மாறக்கூடியது எது?
1) மெழுகு 2) பலாப் பிசின் 3) கற்பூரம் 4) யாவும் சரி

15) காந்தத்தினால் கவர முடியாத பொருளாக அமைவது
1) இரும்பாணி 2) தகரம்
3) செப்புப் பாத்திரம் 4) ஒரு ரூபாய் நாணயம்

16) சூரிய சக்தியைப் பயன்படுத்தி செய்ய முடியாத வேலை யாது?
1) உடைகளை அழுத்துதல் 2) தானியங்களை உலர்த்துதல்
3) நீரை சூடாக்குதல் 4) மின்சார உற்பத்தி

17) காற்று வேகமானி ஒன்று 04 நிமிடங்களில் 20 சுற்றுகளை மேற்கொண்டால் காற்றின் வேகம்
1) நிமிடத்திற்கு 04 சுற்று 2) நிமிடத்திற்கு 05 சுற்று
3) நிமிடத்திற்கு 10 சுற்று 4) நிமிடத்திற்கு 20 சுற்று

18) இலங்கையில் அனல் மின் வலு நிலையம் காணப்படும் இடம்
1) நுரைச்சோலை 2) அம்பாந்தோட்டை
3) களனிதிஸ்ஸ 4) ரன்தனிகல

19) 
எனும் குறியீடு மின்சுற்றில் பயன்படுத்தப்படுவதன் நோக்கம்
1) மின்னைக் கடத்துதல் 2) மின்னைத் துண்டித்தல்
3) மின்னோட்டத்தை அளத்தல் 4) அழுத்த வேறுபாட்டை அளத்தல்

20) மருத்துவத்துறையில் லேசர் கதிர்கள் பயன்படுத்தப்படாத சந்தர்ப்பம்
1) இரப்பைப் புண்ணை கண்டுபிடித்தல்
2) கண் சத்திர சிகச்சை
3) இதய சத்திர சிகிச்சை
4) நீரிழிவு நோய்

(2X20 புள்ளிகள்)

## பகுதி – II

### எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க

01. (a) மாணவர் ஒருவர் களப்பயணத்தின் போது அவதானித்த அங்கிகளின் படங்களை தனது அப்பியாசக் கொப்பியில் ஒட்டினான்

    



அருகிலுள்ள படங்களை அவதானித்து விடை எழுதுக.

i) தாவரவுண்ணி : ..................................................

ii) ஊனுண்ணி : ..................................................

iii) அனைத்துமுண்ணி : ..................................................

iv) ஒளித்தொகுப்புச் செய்வது : ..................................................

(1X 4 புள்ளி )

v) அவதானித்த அங்கிகளைக் கொண்டு 3 இணைப்புகள் கொண்ட உணவுச் சங்கிலி எழுதுக

..................................................................................................................................................

(2 புள்ளி)

b) கீழே காட்டப்படும் அங்கிகள் இடப்பெயர்ச்சி அடையும் முறைகள் எவை?

i) மண்புழு : .......................................................

ii) மீன்கள் : .......................................................

iii) வௌவால் : .......................................................

(1X 3 புள்ளி)

c) i) உயிர்த்திணிவு என்றாலென்ன?

..................................................................................................................................................
..................................................................................................................................................
..................................................................................................................................................

(2 புள்ளி)

ii) உயிர்த்திணிவுக்கு உதாரணம் ஒன்று தருக.

....................................................................... (1 புள்ளி)

02. a) கடந்தவாரம் இலங்கையைச் சூழ ஏற்பட்ட தாழ் அமுக்க நிலை காரணமாக நாட்டின் பல பகுதிகளில் வெள்ள அபாயம் ஏற்பட்டது. இதன்போது வானிலை அவதான நிலையம் தெரிவித்த தகவல்களை மாணவன் சேகரித்தான். அது அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

| திகதி | நகரம் | மழை வீழ்ச்சி (mm) | சராசரி வெப்பநிலை ($^oC$) |
|---|---|---|---|
| 2024.12.05 | கொழும்பு | 60 | 33 |
| | அம்பாறை | 100 | 22.7 |
| | மட்டக்களப்பு | 80.4 | 27.3 |
| | அம்பாந்தோட்டை | 0.8 | 36 |
| | திருகோணமலை | 55 | 30 |

i) கூடியளவு வெப்பநிலை பதிவு செய்யப்பட்ட நகரம் எது? ...................................................................

ii) கொழும்பை விட அம்பாறையில் எவ்வளவு மழை வீழ்ச்சி அதிகமாகக் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது? ..................................................................

iii) அண்ணளவாக ஒரேயளவு வெப்பநிலை பதிவு செய்யப்பட்ட நகரங்கள் எவை?

.............................................................. ..............................................................

( 4 புள்ளி )

b) வானிலைத் தகவல்களைப் பெற மாணவன் ஒருவன் அமைத்த உபகரணங்களை படம் காட்டுகின்றது.

a.


b.


i) மேலேயுள்ள உபகரணங்களை இனங்காண்க.

a. .............................................................. b. ..............................................................

ii) அவ்வுபகரணங்களின் பயன்பாடுகள் எவை?

.............................................................. ..............................................................

( 2X 2 புள்ளி )

c) a. 

b. 


c. 

i) படத்தில் காட்டப்பட்டுள்ள காந்தங்களை இனங்காண்க.

a) ..................................................... b) .....................................................

c) ..................................................... ( 1X 3 புள்ளி )

ii) காந்தத்தில் காணப்படும் முனைவுகளை எழுதுக.

........................................................... ...........................................................

( 1 புள்ளி )

3) (A) 1. அங்கிகளின் சிறப்பியல்புகள் 3 தருக.

.............................................................................................................................

.............................................................................................................................

(3 புள்ளி)

2. தாவரம் ஒளித்தொகுப்பிற்கு பயன்படுத்தும் காரணிகளையும் அவை பெறப்படும் மூலங்களையும் குறிப்பிடுக

| காரணி | பெறப்படும் மூலம் |
|---|---|
| | |
| | |
| | |
| | |

(1/2 X8 புள்ளி)

3. பின்வரும் நீர் மூலங்களுக்கு உதாரணம் தருக.

a. படிவு வீழ்ச்சி : ............................................................

b. நிலகீழ் நீர் : ............................................................

c. மேற்பரப்பு நீர் : ............................................................ (3 புள்ளி)

4. நீரை மாசடையச் செய்யும் மானிடச் செயற்பாடுகள் இரண்டு தருக.

...............................................................................................................

...............................................................................................................

(2 புள்ளி)

04. A. கீழே தரப்பட்ட இணைக்கவர்ச்சுட்டியைப் பூர்த்தி செய்க.




(1X9 புள்ளி)

B. .

1. இணைக்கவர்ச்சுட்டி ஒன்றை அமைக்கும் போது கவனத்தில் கொள்ள வேண்டிய விடயத்தைக் குறிப்பிடுக.

.......................................................................................................................

(2புள்ளி)

2. அங்கிகளை பாகுபடுத்துவதனால் கிடைக்கும் நன்மை ஒன்றினைக் குறிப்பிடுக.

.......................................................................................................................

(1புள்ளி)

05. a) தரம் 6 மாணவர் குழு செய்த மின் தொடர்பிலான சோதனை போது வினவப்பட்ட வினாக்களுக்கு விடை தருக.

1. தரப்பட்ட மினியல் உபகரணங்களை இனங்காண்க.











a. .............................. b ........................... c .................................. d ...............................

(1X4 புள்ளி)

2. தரப்பட்ட மின்னியல் உபகரணங்களின் பொருத்தமான தொழிற்பாடுகளை இணைக்குக.

| A | B |
|---|---|
| அம்பியர் மானி | மின்னழுத்த வேறுபாட்டை அளத்தல் |
| வோல்ற் மானி | மின்னோட்டத்தின் அளவை அளத்தல் |
| தடையி | தேவைக்கேற்ப மின்னை வழங்கல், துண்டித்தல் |
| ஆளி | சுற்றில் பாயும் மின்னோட்டத்தின் அளவை குறைத்தல் |

(4 புள்ளி)

3. கீழே தரப்பட்ட மின்சுற்றிற்கு பொருத்தமான குறியீட்டு வரிப்படத்தை வரைக.



(2 புள்ளி)

a. நீர் உமது அன்றாட வாழ்வில் மின்னை சிக்கனமாக பயன்படுத்தும் வழிகள் 2 தருக.

.......................................................................................................

.......................................................................................................

(2 புள்ளி)